இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 06-08-2025

# தேர்தல் ஆணையம் பதில் சொல்ல வேண்டும்!

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. அடைந்த வெற்றி என்பது 'திருட்டுத்தனமானது' என்று பகிரங்கமாக காங்கிரஸ் கட்சித் தலைவர் ராகுல் காந்தி சொல்லி இருக்கிறார். இந்தியாவின் மக்களாட்சி மரபை குழி தோண்டிப் புதைக்கும் செயல்களுக்கு தேர்தல் ஆணையம் துணை போயிருக்கும் சந்தேகத்தை இது எழுப்புகிறது.

இந்தியத் தேர்தல் ஆணையத்தைக் கைப்பாவையாகப் பயன்படுத்திக் கொண்டு பா.ஜ.க. தனது வெற்றிகளை அடைந்து வருவதாக ராகுல் காந்தி தொடர்ந்து குற்றச்சாட்டுகளை வைத்து வருகிறார்.

**"போலி வாக்காளர்களைப் பட்டியலில் சேர்த்தல், வாக்காளர் வாக்குப் பதிவை உயர்த்துதல், பா.ஜ.க. வெற்றிபெற வேண்டிய பகுதிகளில் போலி வாக்காளர்களைச் சேர்த்தல், அதன்பிறகு அதற்கான ஆதாரங்களை மறைத்தல் போன்றவற்றை 'மேட்ச் பிக்சிங்' மாதிரி செய்கிறது பா.ஜ.க."** என்று மகாராஷ்டிரா மாநில சட்டமன்றத் தேர்தலை முன் வைத்து ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தினார் ராகுல் காந்தி. இதனை ஆதாரப்பூர்வமாக இன்னமும் தேர்தல் ஆணையம் மறுக்கவில்லை. இப்போது 2024 ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலிலேயே முறைகேடுகள் நடந்துள்ளது என்று ராகுல் காந்தி சொல்கிறார்.

"கடந்த ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் மோசடி நடந்துள்ளது. அதற்கான ஆதாரங்களைத் தனது கட்சி விரைவில் வெளியிடும்" என்று நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடரில் பேசியபோது ராகுல் காந்தி தெரிவித்தார். கடந்த தேர்தலில் பா.ஜ.க.வுக்கு குறுகிய பெரும்பான்மையைப் பெற்றுத்தரும் நோக்கத்துடன், மோசடி செய்யப் பபட்டதாக அவர் சாடியுள்ளார். நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசியபோது, வாக்காளர் பட்டியலில் பேரளவில் மோசடி செய்யப்பட்டதற்கான ஆதாரங்களை காங்கிரஸ் கண்டுபிடித்திருப்பதாகத் தெரிவித்தார் ராகுல் காந்தி.

இந்த நிலையில், டெல்லியில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சியின் சட்ட மாநாட்டில் கலந்துகொண்ட ராகுல் காந்தி, வாக்கு திருட்டுக்கான ஆதாரம் தங்களிடம் இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

**"தேர்தல் முறையைப் பற்றி நான் சமீப காலமாகப் பேசி வருகிறேன். 2014 முதலே தேர்தல் முறையில் ஏதோ தவறு இருப்பதாக எனக்குச் சந்தேகம் இருந்து வந்தது. குஜராத் பேரவைத் தேர்தலில் பா.ஜ.க. அமோக வெற்றி பெற்றதில் எனக்கு சந்தேகம் இருந்தது. நாங்கள் இதைப் பற்றி பேசும்போதெல்லாம் மக்கள் ஆதாரங்கள் எங்கே என்று கேட்டார்கள்? பின்னர் மகாராஷ்டிர மக்களவைத் தேர்தலில் நாங்கள் வெற்றி பெற்றோம். ஆனால், 4 மாதங்களில் நடைபெற்ற பேரவைத் தேர்தலில் நாங்கள் படுதோல்வி அடைந்தோம். 3 வலிமையான கட்சிகள் திடீரென மறைந்துவிட்டன.**

**தேர்தல் முறைகேடுகளைப் பற்றித் தீவிரமாக ஆராய்ந்தோம். மகாராஷ்டிரத்தில் அதனைக் கண்டுபிடித்தோம், மக்களவைத் தேர்தலுக்கும் பேரவைத் தேர்தலுக்கும் இடையே ஒரு கோடி புதிய வாக்காளர்கள் தோன்றினார்கள். அந்த வாக்குகளில் பெரும் பகுதி பா.ஜ.க.வுக்குச் சென்றது.**

**தற்போது எந்த சந்தேகமும் இல்லாமல் சொல்கிறேன், எங்களிடம் ஆதாரம் உள்ளது. தேர்தல் ஆணையம் செயல்படவில்லை என்பதை நிரூபிக்க எங்களிடம் ஆதாரம் உள்ளது. அது சமரசம் செய்யப்பட்டுள்ளது. இந்த ஆதாரத்தைக் கண்டுபிடிக்க நாங்கள் 6 மாதங்கள் இடைவிடாமல் உழைத்தோம். சில நாள்களில் மக்களவைத் தேர்தலை பா.ஜ.க. மோசடி செய்து வெற்றி பெற்றதற்கான ஆதாரத்தை வெளியிடுவோம். கர்நாடகா மாநிலத்தில் ஒரு தொகுதியில் 6.5 லட்சம் வாக்காளர்களில் 1.5 லட்சம் பேர் போலியானவர்கள்.**

**உண்மை என்னவென்றால், இந்தியாவில் தேர்தல் முறை ஏற்கனவே இறந்துவிட்டது. மிகக் குறைந்த பெரும்பான்மையுடன் இந்தியாவின் பிரதமராகி இருக்கிறார் மோடி. 15 இடங்களில் மோசடி செய்யப்படாமல் இருந்திருந்தால், அவர் இந்தியாவின் பிரதமராக இப்போது இருந்திருக்க மாட்டார்"** என்று பேசி இருக்கிறார் ராகுல் காந்தி. அவரது குற்றச்சாட்டுகள் சாதாரணமானவை அல்ல. சாமானியர் சொன்ன குற்றச்சாட்டுகளும் அல்ல.

தேர்தல் ஆணையர்கள் நியமனம் முதல் தனது மோசடிகளை பா.ஜ.க. செய்தது. அதே போல் தேர்தல் தொடர்பான சட்டங்களையும் திருத்தியது. அரியானா மாநில சட்டமன்றத் தேர்தலில் பதிவான வாக்குகளுக்கும், அறிவிக்கப்பட்ட வாக்குகளுக்குமே அதிக வித்தியாசம் சில தொகுதிகளில் இருந்தது. எனவே சி.சி.டி.வி. காட்சிகளைத் தருமாறு பஞ்சாப் - அரியானா உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞர் மஹமூத் பிரச்சா என்பவர் வழக்குத் தாக்கல் செய்தார். இந்த வழக்கு நடந்து கொண்டிருக்கும் போதே, 'காகித ஆவணங்களை மட்டும் தான் தர முடியும், சி.சி.டி.வி. கேமரா பதிவுகளையோ, காட்சிகளையோ தர முடியாது' என்று தேர்தல் நடத்தை விதிகளில் திருத்தம் கொண்டு வந்து விட்டார்கள்.

வெளிப்படைத்தன்மை கொண்ட தேர்தல் முறையை ஒழிக்கும் வகையில் தேர்தல் நடத்தை விதிகள் 93(2)(அ)-இல் ஆபத்தான திருத்தங்களைச் செய்தார்கள். இவை போன்ற மோசடிகளால் தான் பா.ஜ.க. வெற்றி பெற்று வருகிறது.

2024 தேர்தல் மூலமாக மீண்டும் ஆட்சிக்கு வர தேர்தல் ஆணையத்தைப் பயன்படுத்தி பா.ஜ.க. பல்வேறு சதி, மோசடிச் செயல்களைச் செய்துள்ளது என்ற குற்றச்சாட்டு இந்தியப் பொது வெளியில் பரவிவிட்டது. இதற்குத் தேர்தல் ஆணையம் பதில் சொல்லியாக வேண்டும். பொத்தாம் பொதுவாக அல்ல; தொகுதி வாரியாக பதில் அளிக்க வேண்டும்.

**வாக்காளர் சேர்க்கை முதல் நீக்கம் வரை ஒவ்வொரு தொகுதியாக பதில் அளிக்க வேண்டும். தேர்தலின் போது பல தொகுதிகளில் வாக்கு எண்ணிக்கையை பல மணி நேரம் நிறுத்தி வைத்துவிட்டு, திடீரென்று அறிவித்தார்கள். இந்த மர்மங்களுக்கு எல்லாம் பதில் சொல்லியாக வேண்டும்.**




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமைச் செயலகத்தில், சேலம் பெரியார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் நிருவாகக்குழு உறுப்பினரும், முத்தமிழறிஞர் கலைஞர் ஆய்வு மையத்தின் இயக்குநருமான பேராசிரியர் இரா.சுப்பிரமணி அவர்கள் தொகுத்த "இதழியல் களத்தில் பெரியார்" எனும் இரண்டு தொகுதிகள் கொண்ட நூலினை வெளியிட்டார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், திராவிடர் இயக்கத் தமிழர் பேரவை தலைவர் சுப.வீரபாண்டியன், கருஞ்சட்டைப் பதிப்பக இயக்குநர் பெல் கு.இராசன் ஆகியோர் உடனிருந்தனர்.

### நாட்டுப்பண் இயற்றப்பட்ட மொழிக்கு அவமதிப்பு:

# வங்காள மொழியை வங்கதேச மொழி என்பதா?

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, ஆக. 6 -

நாட்டுப்பண் இயற்றப்பட்ட வங்காள மொழிக்கு இழைக்கப்பட்ட நேரடி அவமதிப்புதான் வங்காள மொழியை வங்கதேச மொழி என டெல்லி காவல் துறை குறிப்பிட்டிருப்பது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கண்டித்து சமூக வலை தளத்தில் பதிவிட்டுள்ளார்.

முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தள பதிவு வருமாறு: -

**ஒன்றிய உள்துறை அமைச்சரவையின் கீழ் இயங்கும் டெல்லி காவல்துறையானது வங்காள மொழியினை 'வங்க தேச மொழி' எனக் குறிப்பிட்டிருக்கிறது. இது நம் நாட்டுப்பண் இயற்றப்பட்ட வங்க மொழிக்கு இழைக்கப்பட்டுள்ள நேரடி அவமதிப்பாகும்.**

**இத்தகைய அறிக்கைகள் தெரியாமல் நிகழ்ந்த பிழையோ தவறோ அல்ல. இந்தியாவின் பன்மைத்துவத்தைத் தொடர்ந்து சிறுமைப்படுத்தி, ஒருவரது அடையாளத்தைக் கொண்டு தாக்கும் ஆட்சியின் கோர மன நிலையைத்தான் இவை அம்பலப்படுத்துகின்றன.**

**இந்தி அல்லாத மொழிகளின் மீது இத்தகைய தாக்குதல் தொடுக்கப்படும் நேரத்தில், மேற்கு வங்க மாநிலத்தின் மொழியையும் மக்களையும் காக்கும் அரணாகச் சகோதரி மம்தா பேனர்ஜி அவர்கள் திகழ்கிறார். இந்தத் தாக்குதலுக்குத் தக்க பதிலடி தராமல் அவர் ஓயமாட்டார்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!... முதல் பக்கத் தொடர்ச்சி

கடந்த 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடந்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின்போது, 16 ஆயிரம் கோடி ரூபாய் உறுதியளிக்கப்பட்ட முதலீடு மற்றும் 3,500 நபர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட வேலைவாய்ப்பு என்ற வகையில், இந்த உற்பத்தி திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

அடுத்த மாதமே, சிலாநத்தத்தில் இருக்கும் சிப்காட் தொழிற்பேட்டையில், அடிக்கல் நாட்டு விழா நடந்தது. இன்றைக்கு தொடக்க விழா நடைபெறுகிறது! 18 மாதத்தில், இந்த நிறுவனம் உற்பத்தியை தொடங்கியிருக்கிறது. இதனால், தூத்துக்குடி மட்டுமல்ல, தமிழ்நாட்டின் தென் மாவட்டங்கள் மிகப் பெரிய தொழில் பகுதியாக வளர்ச்சியடையும். அதனால், உறுதி யோடு சொல்கிறேன்; இந்நாள் தென் மாவட்டங்களின் ஒரு பொன்னாள். இதுதான், தமிழ்நாட்டின் 'Ease of doing Business'க்கு அத்தாட்சி!

முதற்கட்டமாக, இதுவரை ஆயிரத்து 300 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆண்டுக்கு 50 ஆயிரம் மின் வாகன SUV உற்பத்தியாக இருக்கிறது. தெற்காசியாவிலேயே, வியட்நாமிற்கு வெளியில், இந்த நிறுவனம் தொடங்கியிருக்கும் முதல் மின்வாகன உற்பத்தித் திட்டம் இதுதான்! தமிழ்நாட்டில், அதுவும் நம்முடைய தூத்துக்குடியில் இருக்கும் இந்த ஆலைதான், இந்தியாவிலேயே முழு மின்சார பயணிகள் வாகன உற்பத்தி திட்டம்! இதனால், இந்த வட்டாரத்தைச் சேர்ந்த இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு ஏராளமான வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டிருக்கிறது.

### 'நான் முதல்வன்' திட்டத்தால் 200 பேருக்கு வேலைவாய்ப்பு!

என்னுடைய கனவுத் திட்டமாக இருக்கக்கூடிய "நான் முதல்வன்" திறன் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சிறப்புப் பயிற்சி பெற்று, இதே தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட டிப்ளமோ மாணவர்கள், இந்த நிறுவனத்தில் வேலைவாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, கிட்டத்தட்ட 80 முதல் 90 விழுக்காடு பணியாளர்களை தூத்துக்குடி மற்றும் பக்கத்தில் இருக்கக்கூடிய மாவட்டங்களில் இருந்துதான் இந்த நிறுவனம் பணியமர்த்த போகிறார்கள். உலகளாவிய முதலீட்டில் உள்ளூருக்கான முழுமையான வளர்ச்சி என்கின்ற திராவிட மாடல் அரசின் நோக்கம் நிறைவேறியிருக்கிறது!

இந்த திட்டத்தால் தூத்துக்குடியை சுற்றியிருக்கும் மாவட்டங்களிலும், உதிரி பாகங்கள் உற்பத்தி செய்யும் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சி வாய்ப்புகள் பெருகும். சென்னை, காஞ்சிபுரம், கோவை, ஓசூர் ஆகியவற்றைத் தொடர்ந்து, வளர்ந்து வரும் மோட்டார் வாகன தொழிற் கூடமாக தூத்துக்குடி உருவெடுத்து வருகிறது. இப்படித்தான் ஒவ்வொரு மண்டலமாக பார்த்துப் பார்த்து வளர்த்தெடுக்கிறோம்!

### மின் வாகனங்களின் தலைநகரம்!

இந்தியாவின் இரண்டாவது முழு மின்வாகன உற்பத்தித் திட்டம் என்ற வகையில், கடந்த 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் TATA JLR நிறுவனத்தின் மின் வாகன உற்பத்திக்கு இராணிப்பேட்டை மாவட்டத்தில், அடிக்கல் நாட்டினேன். இதன்மூலம், தமிழ்நாடுதான் 'மின் வாகனங்களின் தலைநகரம்' என்று உலகத்திற்கு நாங்கள் மீண்டும் உறுதிப்படுத்தி இருக்கிறோம்.

தற்போது, ஹூண்டாய், நிஸான், டாடா மோட்டார்ஸ், BMW, BYD, ஓலா, ஏர்தர், டிவிஎஸ், ஆம்பியர் போன்ற முன்னணி நிறுவனங்கள், தங்களின் மின் வாகன உற்பத்தியை தொடங்கிவிட்டார்கள். இன்னும் பல பாரம்பரிய கார் நிறுவனங்களும், மின்சார வாகனங்களின் பாதையை தேர்ந்தெடுக்க இருக்கிறார்கள். தமிழ்நாட்டிற்கு மின்சார வாகனங்களை கொண்டு வரும் இந்த சவாலான பயணத்தில், நீங்கள் எல்லோரும் எங்களுடன் இருக்கிறீர்கள் என்பதில் எனக்கு பெரும் மகிழ்ச்சி.

### தொடர்ந்து முதலீடு மேற்கொள்வீர்!

இந்த மகிழ்ச்சியான நேரத்தில், வின் குழுமத்தினரான உங்களிடம் ஒரு கோரிக்கையை முன்வைக்க விரும்புகிறேன். உங்களின் வின் குழுமம் வாகனத் துறையில் மட்டுமல்லாமல், கல்வி, மருத்துவம், தகவல் தொழில்நுட்பம், நுகர்வோர் பொருட்கள் உள்ளிட்ட பல துறைகளில் கோலோச்சும் குழுமம். உங்களின் வருங்கால முதலீடுகளை எல்லாம், தமிழ்நாட்டிலேயே தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் என்று தமிழ்நாட்டின் முதலமைச்சராக இந்த நேரத்தில் நான் உங்களை எல்லாம் கேட்டுக் கொள்கிறேன். வின்ஃபாஸ்ட் உற்பத்தித் திட்டம் தூத்துக்குடியில் நிறுவப்பட உறுதுணையாக இருந்த திராவிட மாடல் அரசு, உங்களின் அனைத்து முதலீட்டுத் திட்டங்களுக்கும் தேவையான உதவிகளை செய்து தர தயாராக இருக்கிறோம் என்று உறுதியளித்து, உங்கள் எல்லோருக்கும் மீண்டும் எனது நன்றிகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



முதலமைச்சர் அவர்கள் 02.08.2025 அன்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் சென்னை, சாந்தோம், செயின்ட் பீட்ஸ் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில், தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் "நலம் காக்கும் ஸ்டாலின்" சிறப்பு மருத்துவ முகாமினை தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" சிறப்பு மருத்துவ முகாமினை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மு.அருணா தலைமையில் பார்வையிட்டு, முகாமில் கலந்துகொண்ட பயனாளிகளுக்கு மருத்துவ உதவிகளை வழங்கினார். உடன் மரு.வை.முத்துராஜா எம்.எல்.ஏ., புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.எஸ்.கலைவாணி, மரு.சா.ஸ்ரீபிரியா தேன்மொழி, மரு.ராம்கணேஷ், மரு.விஜயகுமார் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.